بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31/12/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 5

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

اِلَّا تَنْصُرُوْهُ فَقَدْ نَصَرَهُ اللّٰهُ اِذْ اَخْرَجَهُ الَّذِيْنَ كَفَرُوْا ثَانِيَ اثْنَيْنِ اِذْ هُمَا فِي الْغَارِ اِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا ۚ فَاَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ عَلَيْهِ وَاَيَّدَهٗ

بِجُنُوْدٍ لَّمْ تَرَوْهَا وَجَعَلَ كَلِمَةَ الَّذِيْنَ كَفَرُوا السُّفْلٰى ۗ وَكَلِمَةُ اللّٰهِ هِيَ الْعُلْيَا ۗ وَاللّٰهُ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۴۰﴾

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஸௌர் குகை சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட்டு வந்தன. இந்த சம்பவம் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

நீங்கள் இந்தத் தூதருக்கு உதவி செய்யவில்லையாயின், நிராகரிப்பவர்கள் அவரை இருவருள் அந்த ஒருவராக இருந்த நிலையில் வெளியேற்றிய நேரத்திலும், அவ்விருவரும் குகையில் இருந்த போது அவர் தம்முடைய நண்ப(ர் அபூபக்)ரிடம் (சென்ற கால சின்னஞ்சிறு தவறுகளைப் பற்றி) கவலைப்படாதீர். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறிக் கொண்டிருந்த நேரத்திலும் அல்லாஹ் அவருக்கு உதவி செய்துள்ளான் (என்பதனை நினைவில் கொள்ளுங்கள்).

பின்னர் அல்லாஹ் அவருக்குத் தனது அமைதியினை இறக்கி நீங்கள் காணாத படைகளைக் கொண்டு அவன் அவருக்கு உதவி செய்து, நிராகரிப்பவர்களின் வார்த்தையை மிகவும் கீழ்த்தரமானதாக்கிவிட்டான். அல்லாஹ்வின் வார்த்தையே எப்போதும் மிக உயர்ந்தது. அல்லாஹ் மிகைத்தவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். (அதிகாரம் அத்தவ்பா - 9:40)

மக்கத்து காஃபிர்கள் குகை வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிடிப்பட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தில் பதற்றமடைந்து விட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا கவலை படாதீர்! நிச்சயம் நமது இறைவன் நம்முடன் இருக்கிறான். ஸௌர் குகையின் மலைக்கு அருகில் சென்றடைந்ததும் தடம் பார்த்து சொல்பவன் கூறினான்: அவர்கள் இந்த இடத்தைத் தாண்டி செல்லவில்லை. இதைக் கேட்ட ஒருவன் குகைக்குள் எட்டிப்பார்க்க முயற்சி செய்தான். அப்போது உமய்யா பின் கல்ஃப் சிடுசிடுத்து, அலட்சியமாகக் கூறினான்:

இந்த சிலந்தி வலையையும் மரத்தையும் முஹம்மத் (ஸல் அவர்கள்) பிறப்பதற்கு முன்பிலிருந்தே நான் இங்கு பார்க்கிறேன். உங்கள் மூளை குழம்பி விட்டதா? அவர் இங்கே எப்படி இருக்க முடியும்?

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** மக்கத்து குறைஷியர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்து வரக்கூடிய நிலையில் நூறு ஒட்டகம் பரிசளிக்கப்படும் என்று அறிவிப்பு செய்தனர். இந்தப் பரிசின் மீதான பேராசையினால் பல மக்கள் மக்காவின் நாலாப்புறமும் இங்கும் அங்குமாகப் பரவிவிட்டனர். குறைஷி குல தலைவர்கள் குகையை அடைந்த போது அவர்கள் குகை வாசலில் இருந்த மரத்தில், சரியாக குகை வாசலுக்கு அருகில் இருந்த கிளையில் ஒரு பெண் புறா கூடு கட்டி முட்டை இட்டிருப்பதையும் ஒரு சிலந்தி வலை பின்னியிருப்பதையும் கண்டார்கள்.

வெளிப்படையாக, இந்த அறிவிப்பு பலவீனமானது. ஆனால், இவ்வாறு நடந்திருந்தாலும் வியப்பிற்குரிய விஷயம் அல்ல. ஏனெனில், சில வேளைகளில் சிலந்தி சில நிமிடங்களில் ஒரு விசாலமான இடத்தில் வலை பின்னி விடுகிறது. புறாவுக்குக்கூட கூடு கட்டுவதற்கும் முட்டை இடுவதற்கு அதிகம் நேரம் எடுப்பதில்லை. எனவே, இறைவன் தனது தூதரின் பாதுகாப்புக்காக இத்தகைய ஏற்பாடு ஆகச் செய்திருந்தால், அது ஒன்றும் அப்பாற்பட்ட விஷயம் அல்ல. இன்னும் சொல்வதென்றால், அந்த நேரத்தைப் பொறுத்த வரையில் இவ்வாறு நிகழ்வது முற்றிலும் சாத்தியமானது தான். அறிவிப்பு வருகிறது:

குறைஷியர்கள் எந்த அளவு அருகில் வந்து விட்டார்கள் என்றால், அவர்களின் கால்கள் குகைக்குள் இருந்து பார்க்கையில் தென்பட்டன. அவர்களின் குரல் கேட்டது. நிராகரிப்பாளர்கள் இவ்வளவு அருகில் இருப்பதைக் கண்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றம் அடைந்து விட்டார்கள். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் வினவினார்கள்: அபூபக்ரே! எவர்களுடன் மூன்றாவதாக அவர்களின் இறைவன் இருக்கிறானோ அவ்விருவரைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உருக்கமான குரலில் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் கொல்லப்பட்டால், நானோ தனித்த ஓர் உயிர்தான். ஆனால், இறைவன் நாடாதிருக்கட்டுமாக! தங்களுக்கு ஏதாவது ஏற்பட்டால், பிறகு ஒருவகையில் முழு சமுதாயமும் அழிந்து விடும்.

**சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்த சம்பவத்தின் ஓர் அம்சம் இதுவாகும்: மூஸாவின் தோழர்கள் பதற்றமடைந்து, 'மூஸாவே! நாம் பிடிக்கப்பட்டோம்' என்று கூறினர். ஆனால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் தவக்குல் (இறைநம்பிக்கை) அன்னாரது தோழர் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவரது நாவிலிருந்தும் நாம் பிடிக்கப்பட்டோம் என்ற சொற்கள் வெளிப்படவில்லை. அவர், 'எதிரி எந்த அளவு அருகில் வந்து விட்டான் என்றால் அவன் நம்மைப் பார்க்க நினைத்தால் பார்த்து விடலாம்' என்பதை மட்டும் தான் கூறினார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அந்த இன்னல் நிறைந்த தருணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தத் தேர்ந்தெடுத்தலே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் உயர் நன்றியுணர்விற்கு அருமையான ஆதாரமாகும். அச்சமயம் அன்னாரிடம் 70, 80 சஹாபா இருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரிலும் அன்னார் தம்முடன் இருப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களையே தேர்ந்தெடுத்தார்கள். இதில் உள்ள ரகசியம் என்ன? விஷயம் என்னவென்றால், நபி இறைவனின் கண் கொண்டு காண்கிறார். அவரது புரிதல் அல்லாஹ்விடமிருந்தே வருகிறது. எனவே, அல்லாஹ்வே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஆன்மீகக் காட்சி மூலமாகவும் இல்ஹாம்

மூலமாகவும் இந்தப் பணிக்கு எல்லாரையும் விடச் சிறந்தவரும் பொருத்தமானவரும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களே ஆவார்கள் என்று கூறிவிட்டான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்தக் கஷ்ட காலத்தில் அன்னாருடன் இருந்தார்கள். இது மிகவும் சோதனைக்குரிய நேரமாக இருந்தது. ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கு இது போன்ற நேரம் வந்த போது அவர்களின் சீடர்கள் அவர்களை விட்டுச் சென்று விட்டார்கள். ஒருவர் சபிக்கவும் செய்தார். ஆனால், கண்ணியத்திற்குரிய சஹாபாவில் ஒவ்வொருவரும் முழு நன்றியுணர்வின் முன்மாதிரியைக் காட்டினார்...

இந்தச் சொற்களில் ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தம்முடன் இணைக்கிறார்கள். ஆக, அன்னார் கூறுகிறார்கள்: لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا - مَعَنَاஎன்ற சொல்லில் அவர்கள் இருவரும் இணைந்துள்ளார்கள். அதாவது, அல்லாஹ் உம்முடனும் என்னுடனும் இருக்கிறான். அல்லாஹ் தராசில் ஒரு பக்கம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் மறுபுறம் ஹஸ்ரத் சித்தீக் (ரலி) அவர்களையும் வைத்தான்.

அறிவிப்பில் வருகிறது: தீர்மானிக்கப்பட்ட திட்டப்படி அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் திறமைப் பெற்ற மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் இரவில் ஸௌர் குகைக்கு வருகிறார். நாள் முழுவதும் நடந்தவற்றைத் தெரியப்படுத்துகிறார். வழிகாட்டல் பெறுகிறார். மேலும், மக்காவிலேயே இரவைக் கழித்தது போன்று அதிகாலையில் மக்காவுக்குத் திரும்பி வந்து விடுகிறார். ஆமிர் பின் ஃபுஹைரா அவர்கள் தமது புத்திக்கூர்மையால், இரவில் பால் கறக்கும் ஆடுகளின் பாலைக் கொடுத்த பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் அவர்களின் காலடித் தடங்களை அழித்த வண்ணம் திருப்பி ஓட்டி வருவார்கள்.

சஹீஹ் புகாரியின் அறிவிப்புக்கு ஏற்ப அப்துல்லாஹ் பின் அரீக்கத்திடம், அவர் மூன்று நாள்களுக்குப் பிறகு காலை வேளையில் ஒட்டகத்தை அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்று உறுதி பெறப்பட்டிருந்தது. ஆகவே, மூன்றாவது நாள் அவர் ஒட்டகங்களை அழைத்துக் கொண்டு ஸௌர் குகைக்கு வந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் ஒட்டகத்தின் பெயர் குஸ்வா என்று தெரிய வருகிறது. அதன் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வீட்டில் மொத்தமாக ஐந்தாயிரம், ஆறாயிரம் திர்ஹம்கள் இருந்தன. அவர்கள் புறப்பட்ட போது அந்தப் பணத்தைத் தம்முடன் வைத்துக் கொண்டார்கள். அவர்கள் மக்காவிலிருந்து புறப்படும் போது மிகவும் வேதனையுடன் கூறினார்கள்: இந்த மக்கள் தமது தூதரை வெளியேற்றி இருக்கிறார்கள். இப்போது இவர்கள் நிச்சயம் அழிவிற்குள்ளாவர்.

மக்காவிலிருந்து ஏறத்தாழ 82 மைல் தொலைவில் உள்ள ‘ஜுஹ்ஃபா’ என்ற இடத்தை அடைந்ததும் اِنَّ الَّذِىْ فَرَضَ عَلَيْكَ الْقُرْاٰنَ لَرَآدُّكَ اِلٰى مَعَادٍ என்ற புனித வசனம் இறங்கியது. அதாவது, திருக்குர்ஆனை உம்மீது கடமை ஆக்கியவன் நிச்சயம் திருப்பி வரக்கூடிய ஓர் இடத்திற்கு உம்மைத் திருப்பி அழைத்து வருவான்.

இரவு முழுவதும் இந்தப் பயணம் தொடர்ந்தது. மதிய வேளை வர ஆரம்பித்ததும் பயணக்குழு ஒரு பாறையின் நிழலில் இளைப்பாறுவதற்காக தங்கியது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படுக்கை விரித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஓய்வெடுக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்

பின்தொடர்பவர்கள் எவரும் வரவில்லையே! என்பதைப் பார்ப்பதற்காக வெளியே வந்தார்கள். இதற்குள் தூரத்திலிருந்து ஆடு மேய்பவன் ஒருவனும் நிழலைத் தேடி அந்தப் பக்கம் வந்தான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனிடம், நீ எங்களுக்காக சிறிது பால் கறந்துக் கொடுப்பாயா?' என்று கேட்டார்கள். அவன், ஆம் என்றான். பிறகு அவனிடம், 'மடியை நன்றாக சுத்தம் செய்' என்று கூறினார்கள்.

பிறகு, தமது கண்காணிப்பில் பாத்திரத்தில் பாலை ஊற்றச் செய்தார்கள். பாலின் உஷ்ணம் சற்று தணிவதற்காக அதில் தண்ணீரை ஊற்றினார்கள். பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பாலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தார்கள். அன்னார் எவ்வளவு அருந்தினார்கள் என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 'நான் மகிழ்ச்சி அடைந்தேன்' என்று கூறுகிறார்கள். அரீக்கத் போன்ற திறமை பெற்ற ஒரு வழிகாட்டியின் கண்காணிப்பில் கறையோர பகுதிகள் வழியாக மதீனாவை நோக்கி இந்தப் பயணம் தொடங்கியது.

பரிசு மீதான பேராசையால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்தவர்களில் ஒருவர் பெயர் ஸுராக்கா பின் மாலிக்கும் ஆகும். அவர் பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டார். அவர் தானே இந்த சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்திருக்கிறார். அவருடைய கூற்றுப்படி மீண்டும் மீண்டும் இந்தப் தொடர்தலுக்கு எதிராகவே சகுனம் வந்தும் கூட அவர் முயற்சி செய்து கொண்டே இருந்தார். அவருடைய ஒட்டகம் மிகவும் தடுமாறியது. அதன் கால்கள் மணலில் புதைந்து விட்டன.

கடைசியில், இந்தப் பின் தொடர்தல் சரியானதாக இருக்கவில்லை என்பது அவருக்கு உறுதியாகத் தெரிந்து விட்டது. அவர் உயிருக்கு உத்திரவாதம் அளிப்பதாக குரல் கொடுத்தார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் முன் ஆஜராகி, 'நிச்சயம் ஒரு நாள் தாங்கள் அரசராகி விடுவீர்கள் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. அந்த நாளில் என்னோடு மதிப்பு, மரியாதையுடன் நடந்து கொள்ளப்பட வேண்டும் என்று எனக்கு ஏதாவது உறுதி எழுதித் தாருங்கள்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த மடலை எழுதச் செய்தார்கள்.

*இந்த நற்குறிப்பு இனிவரும் காலங்களில் தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் புத்தாண்டின் துவக்கத்தை முன்னிட்டு உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு துஆக்கள், நஃபில்கள், தனிப்பட்ட மற்றும் ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகைகள் ஆகியவற்றின் பால் கவனமூட்டினார்கள். துரூத் ஷரீஃப், இஸ்திஃக்ஃபார் மற்றும் இவ்விரு துஆக்களை ஓதுமாறு கட்டளையிட்டார்கள்:*

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ்வரும் மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

முல்தான் மாவட்டத்தின் முன்னாள் அமீர் மதிப்பிற்குரிய மலிக் ஃபாரூக் அஹ்மத் கோகர் சாஹிப் அவர்கள், இந்தோனேஷியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மற்றம் காஷ்மீரின் யாரீ பூராவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அல்ஹாஜ் அப்துல் ஹமீத் டாக் சாஹிப் அவர்கள்.

***ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*** இவர்கள் டிசம்பர் 24 அன்று 94 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَ اِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ அல்லாஹ்வின்

அருளால் மூஸியாக இருந்தார்கள். யாரீ பூராவின் முஹம்மத் அக்ரம் டாக் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். அவர்கள் அந்தப் பகுதியின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். மர்ஹூம் மிகவும் நற்பண்புடையவராகவும், மென்மையான இயல்புடையவராகவும் நன்றாகப்பழகுபவராகவும் எல்லாருக்கும் பிடித்தமானவராகவும் ஒழுக்கமான, மௌனமான இயல்புடைய சான்றோராகவும் இருந்தார்கள்.

நீண்ட காலம் ஜமாஅத் தொண்டுகள் ஆற்றுவதற்கான நல்வாய்ப்புப் பெற்றார்கள். ஜம்மு காஷ்மீரின் மாநில அமீராக இருந்தது போக, மாவட்ட அமீராகவும் நாஸிம் அன்ஸாருல்லாஹ்வாகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்புப் பெற்றார்கள். உள்ளூர் ஜமாஅத்தில் உள்ளூர் பொறுப்புகளில் தொண்டாற்றி வந்தார்கள். ஆண்டாண்டு காலமாக இந்திய அஞ்சுமன் தஹ்ரீகே ஜதீதின் கௌரவ உறுப்பினராக அங்கம் வகித்தார்கள். மாநில அமீராக இருந்த காலத்தில் **1987** இல் காஷ்மீரில் ஐந்து ஜமாஅத் பள்ளிக்கூடங்கள் இவர்களின் காலத்தில் நிறுவப்பட்டன.

பல பள்ளிவாசல்கள் மற்றும் பிரச்சார நிலையங்களைக் கட்டுவதில் இவர்கள் கடுமையாக உழைத்துள்ளார்கள். இளைஞர்களின் அறிவுத் திறமைகளை வெளிக் கொணர்வதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் பல முயற்சிகள் மேற்கொண்டு வந்தார்கள். இந்தப் பணியில் எப்போதும் முன்னணி வகித்து வந்தார்கள். யாரீ பூரா பகுதியில் இவர்களின் சமூக பணிகள் காரணமாக இவர்களுக்கு அதிகம் மரியாதை இருந்தது.

அல்லாஹ் இவர்களுடன் மஃக்ஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் அடுத்து வரும் சந்ததிகளையும் நற்பண்பு உடையவர்களாகவும் நற்செயல் செய்பவர்களாகவும் ஆக்குவானாக! தொண்டாற்றும் நல்வாய்ப்புகளை வழங்கி வருவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மஃக்ஃபிரத் மற்றும் அந்தஸ்த்து உயர்வுக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رحمکم اللّٰه اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னீ)**